## நிர்மாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகத்தின் (ஐசீரீஏடி) - 2014

நிர்மாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகத்தின் (ஐசீரீஏடி) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிசார் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்து மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1957 இன் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபன அதிகாரச்சட்டத்தின் 29(2) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 கணக்காய்வு அபிப்பிராயம்

நிதிக்கூற்றுக்களானவை நிர்மாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகத்தின் (ஐசீரீஏடி) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு (எஸ்எல்பிஎஸ்ஏஎஸ்) இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள் (எஸ்எல்பிஎஸ்ஏஎஸ்)

**எஸ்எல்பிஎஸ்ஏஎஸ் 7 – ஆதனம், பொறி மற்றும் உபகரணம்** - நியமத்தின் 49 ஆம் பந்தியின் பிரகாரம், ஆதனம், பொறி மற்றும் உபகரணம் என்பவற்றிலுள்ள ஒரு விடயம் மீள விலைமதிக்கப்படின் அச் சொத்து எதன் கீழ் வருகின்றதோ அந்த எல்லா ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களும் மீள்விலைமதிப்புச் செய்யப்படுதல் வேண்டும். இருப்பினும், ரூபா 685,343,662 பெறுமதியில் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தில் உள்ளடங்கியுள்ள ரூபா 111,825,105 புத்தகப் பெறுமதியுடைய கட்டிடங்கள் மீள விலைமதிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் முன்கொண்டு சென்ற பெறுமதியை நிச்சயிப்பதற்கான கிரய முறையும் அவ்வாறே மீள விலைமதித்தல் முறையும் பயன்படுத்தப்பட்டிருந்தன.

#### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(ஆ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பௌதீக ரீதியாக மெய்மையாய்வு செய்யப்பட்ட மீதியை எடுப்பதற்குப் பதிலாக அத்திகதியிலான இருப்பின் பேரேட்டு மீதி நிதிக்கூற்றுக்களிற்கு எடுத்துவரப்பட்டிருந்தது. ஆகையால், நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள ரூபா 138,714,770 தொகையான இறுதி இருப்பின் சரியான தன்மையினையும் நிதிக்கூற்றுக்களிற்கான அதன் தாக்கத்தையும் நிச்சயிக்க முடியவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்கான வருடாந்த இருப்பு மெய்மையாய்வு அறிக்கைகளின் படி, 47 இருப்பு விடயங்கள் மேலதிகமாக உள்ளமை இனங்காணப்பட்டது. இருப்பினும், இது தொடர்பில் நிதிக்கூற்றுக்களில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) Gesellschaft fur Internationale Zusammenabeit (GIZ) செயற்திட்டத்திடமிருந்து 2013 இல் கிடைத்திருந்த ரூபா 14,286,462 தொகையான சொத்தில் ரூபா 1,410,778 பெறுமதியான சொத்துக்கள் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறும் மூலதனமாக்கப்படாது இருப்பில் வைக்கப்பட்டிருந்தது.

#### 2.2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிறுவகத்தால் வழங்கப்பட்ட காலப்பகுப்பாய்வின் பிரகாரம், ரூபா 2,550,614 தொகையான சில்லறைக் கடன்கொடுத்தோர் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மூன்று ஆண்டுகளிற்கு மேலாக நிலுவையாக இருந்தது. அதில், ரூபா 1,719,187 தொகை ஐந்து ஆண்டுகளிற்கு மேலாக தீர்க்கப்படாமல் இருந்தது.

(ஆ) குறித்த பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தில் பங்குபற்றியோருக்கு கடன் வசதி விரிவாக்கப்பட்டிருந்தமை காரணமாக 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிர்மாண உபகரண பயிற்சி நிலையத்தில் (CETRAC) ரூபா 568,847 கடன்பட்டோர் மீதி ஏற்பட்டிருந்ததுடன் அதன் காரணமாக அந்த நிலுவை கடன்பட்டோர் மீதியின் அறவீட்டுத் தன்மை ஐயத்திற்கிடமாக இருந்தது.

(இ) நிர்மாணத் துறை தொடர்பான சில பயிற்சி பாடநெறிகள் நிறுவகத்தின் பயிற்சிக்காக தாபிக்கப்பட்டுள்ள நிலையமான வாழ்விடத் திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி நிலையத்தால் நடாத்தப்பட்டிருந்தது. 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையாக இருந்த ரூபா 175,000 ஆன பாடநெறிக் கட்டணம் 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் அறவிடப்படாமல் இருந்தது.

(ஈ) 1997 ஆம் ஆண்டு முதல் 2004 வரையிலான காலப்பகுதியில் மோட்டார் வாகனங்கள், பொறி மற்றும் இயந்திரங்களை வாடகைக்கு வழங்கியமை தொடர்பில் தேசிய உபகரண மற்றும் இயந்திர தாபனத்திலிருந்து (NEMO) பெற வேண்டிய ரூபா 114,529,393 ஆன மீதி 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், அந்த நிலுவை மீதி தொடர்பில் நிதிக்கூற்றுக்களில் ஒரு முழுமையான ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

### 2.2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

கணக்காய்வில் பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுக்கான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் | |
| (அ) பிரிவு 11 | நிதி அமைச்சிடமிருந்து வேண்டப்பட்ட அங்கீகாரம் பெற்றுக் கொள்ளாமல் மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு திறைசேரி உண்டியல்களில் ரூபா 15,707,803 ஆன தொகை முதலீடு செய்யப்பட்டிருந்தது. |
| (ஆ) பிரிவு 13(2) | 1998 முதல் 2011 வரையான காலத்திற்கான ரூபா 1,417,983 தொகையான கணக்காய்வுக் கட்டணம் 2014 ஆம் ஆண்டின் இறுதி வரை செலுத்தப்படாதிருந்தது. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, மீளாய்வாண்டிற்கான நிறுவகத்தின் தொழிற்பாடுகள் முன்னைய ஆண்டிற்கான ரூபா 19,724,647 ஆன நேரொத்த பற்றாக்குறையுடன் ஒப்பிடும் போது ரூபா 20,384,756 ஆன பற்றாக்குறையை விளைவித்திருந்தமையால் மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகளால் 660,109 ஆன பின்னடைவு காட்டப்பட்டது. வருமானம் மற்றும் திறைசேரி மானியத்தின் முறையே ரூபா 26,364,017 மற்றும் ரூபா 21,609,999 அதிகரிப்புக்களிற்கு எதிராக செலவினம் ரூபா 47,377,348 ஆல் அதிகரித்திருந்தமையே நிதி விளைவுகளில் இந்த பின்னடைவுக்கு பிரதான காரணங்களாக உள்ளன.

**3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிறுவகத்தின் செயற்பாட்டுப் பற்றாக்குறை 266 உத்தியோகத்தர்கள், ரூபா 1,227 மில்லியன் பெறுமதியான மொத்தச் சொத்துக்கள் மற்றும் மீளாய்வாண்டின் போது பெறப்பட்ட ரூபா 91 மில்லியன் அரசாங்க உதவுதொகை என்பவற்றை பயன்படுத்தியதன் விளைவால் ரூபா 20 மில்லியன் ஆக இருந்தது.

(ஆ) நிறுவகத்தின் மீளாய்வாண்டிற்கான பற்றாக்குறை முன்னைய ஆண்டிற்கான 3 சதவீதத்துடன் ஒப்பிடும் போது மொத்த சொத்துக்களில் 1.6 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தியது, ஆதலால் அது 1.4 சதவீத சாதகமான நிலையை காட்டியது

**4. செயற்பாட்டு மீளாய்வு**

**4.1 முகாமைத்துவ திறமையீனங்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1996 ஆம் ஆண்டிலிருந்து வெளிநாட்டு உதவிக் கணக்கில் வைத்திருக்கப்பட்டுள்ள ரூபா 2,663,659 தொகையினை பொதுத் திறைசேரிக்கு தீர்ப்பனவு செய்வதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) உள்ளபடியான தேவைகளை மதிப்பிடாமல் ஒப்பந்தக்காரர்களின் விபரங்கள் அடங்கிய விபரக்கொத்தில் இரண்டாயிரம் பிரதிகள் ரூபா 4,351,000 மொத்தக் கிரயத்தில் 2009 ஆம் ஆண்டில் அச்சிடப்பட்டிருந்தன. ஆகையால், அவற்றில் 966 பிரதிகள் அவற்றின் உள்ளடக்கங்கள் ஏற்கனவே காலங்கடந்தவையாக காணப்பட்ட போதிலும் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு களஞ்சியங்களில் விளைவற்று காணப்பட்டன.

(இ) நிர்மாண உபகரண பயிற்சி நிலையத்தின் (CETRAC) 2014 ஆம் ஆண்டிற்கான செயற்பாட்டு நட்டங்கள் ரூபா 26,435,396 ஆகக் காணப்பட்டதுடன், தேறிய இலாப விகிதம் 101 சதவீத எதிர்மறைப் பெறுமதியைக் கொண்டிருந்தது. இருப்பினும், தோல்விக்கான காரணங்கள் சிரேஷ்ட முகாமைத்துவ கூட்டங்களில் கலந்துரையாடப்பட்டிருக்கவில்லை.

(ஈ) நவீன நிர்மாண வடிவங்களை அறிமுகப்படுத்தி காட்சிப்படுத்துவதன் மூலம், தற்போதைய காலத்திற்கு ஏற்ற விதத்தில் நவீன மற்றும் பாரம்பரிய கட்டிட உபகரணங்களையும் தொழில்நுட்பத்தினையும் பயன்படுத்தி சமூகத்துடன் நிர்மாணம் தொடர்பான அறிவினை வெளிப்படுத்தி, பகிர்ந்து கொள்வதற்காக தேசிய சுற்றாடல் நிர்மாண தொழில்நுட்ப கருப்பொருள் பூங்கா ஏற்படுத்தப்பட்டிருந்தது. மேற்படி செயற்திட்டம் 2011 திசெம்பரில் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் மூன்றாண்டு காலத்தில் பூரணப்படுத்துவதற்கு பட்டியலிடப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) நிர்வாக கட்டடிடத்தின் நிர்மாணம் தவிர்ந்த செயற்திட்டத்தின் ஏனைய சகல கூறுகளும் நிர்மாணத் தொழிலிலுள்ள ஆர்வமுள்ள தரப்பினரால் பொறுப்பேற்கப்படுதல் வேண்டும். செயற்திட்டத்தின் நிர்வாகக் கட்டிடத்திற்காக ரூபா 60 மில்லியன் தொகையினை நிதியளிப்பதற்கு அரசாங்கம் இணங்கியிருந்ததுடன் அதில் ரூபா 40 மில்லியன் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஐசீரீஏடீ இற்கு ஏற்கனவே விடுவிக்கப்பட்டிருந்தது. இந்த நோக்கத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்த காலம்

முடிவடைந்திருந்த போதிலும், நிர்மாண வேலைகள் இன்னும் நடைபெற்று வருகின்றன.

(ii) செயற்திட்டக் காலத்தில் ஐந்து மாதிரி வீடுகளை நிர்மாணிப்பதற்கு செயற்திட்டம் திட்டமிட்டிருந்த போதிலும், நான்கு வீடுகளை நிர்மாணிப்பதற்கு மாத்திரம் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், குறித்த மூன்று ஆண்டு காலத்தில் இரண்டு வீடுகள் மாத்திரம் பூரணப்படுத்தப்பட்டிருந்தன. எஞ்சிய மாதிரி வீடுகள் 2015 மே 31 ஆந் திகதி வரை படிவம் நிர்மாணிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) செயற்திட்ட பிரேரணையில் உள்ளடக்கப்பட்டிருந்த மழை நீரை சேகரித்து வைக்கும் முறைமையுடன் கூடிய வீடுகளை நிர்மாணித்தல், வினைத்திறனான சக்திவளமாக சூரிய சக்தியின் பயனுறுதிமிக்க பாவனையை காட்சிப்படுத்துதல், மாதிரி காற்று மின்சார உற்பத்தி பொறியினை தாபித்தல், வரண்ட வலயங்களிற்கான நில வீதிகளை நிர்மாணித்தல் போன்ற செயற்பாடுகள் 2015 மே மாதம் இறுதி வரையிலும் பூரணப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(iv) கருப்பொருள் பூங்காவின் உரிமைத்துவம் தெளிவாக இனங்காணப்பட்டிருக்கவில்லை.

(உ) ‘‘மஹாபிமானி’’ தேசிய நிர்மாண விருது வழங்கல் விழா இரண்டாவது தடவையாகவும் 2014 ஆம் ஆண்டில் ஐசீரீஏடீ இனால் நடாத்தப்பட்டிருந்தது. தொழிலுள்ள ஆட்களை ஊக்கப்படுத்துதல், சமூக மனப்பாங்கினை மாற்றி நிர்மாணத் தொழிலிற்கு ஏற்ற கவர்ச்சிகரமான சுற்றாடலை உருவாக்குதல் போன்ற குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்காக ரூபா 11,322,890 செலவினம் செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், மிக அதிகமான தொகையான மொத்தச் செலவினத்தில் ரூபா 5,961,712 அல்லது 53 சதவீதம் பிரசாரத்திற்காக செலவிடப்பட்டிருந்தது.

**4.2 சர்ச்சைத் தன்மையான கொடுக்கல்வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வரிசை அமைச்சின் வேண்டுகோளிற்கு அமைய நாட்டுக்கு மகுடம் நிகழ்ச்சித்திட்டம் மற்றும் உலக வாழ்விட தின நிகழ்ச்சித்திட்டம் என்பவற்றை விளம்பரப்படுத்துவதற்காக நிறுவகம் ரூபா 1,156,250 தொகையினை செலவிட்டிருந்தது.

(ஆ) 2014 இல் ‘‘மஹாபிமானி’’ நிகழ்ச்சித்திட்டத்தின் விளம்பரச் செலவுகளிற்காக வழங்கப்பட்ட ரூபா 4,671,161 பெறுமதியான ஐந்து காசோலைகள் 2015 சனவரி மாதத்தில் இரத்துச் செய்யப்பட்டிருந்ததுடன் இக் காசோலைகளை இரத்துச் செய்தமைக்கான காரணங்கள் கணக்காய்விற்குக் கிடைத்திருக்கவில்லை.

(இ) கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, 2014 ஆம் ஆண்டிற்கான நிறுவகத்தின் நிதி விளைவுகள் ரூபா 20,384,756 பற்றாக்குறையாக காணப்பட்டது. இருப்பினும், நிறுவகம் அதன் பதவியணியினருக்கு மிகையூதித்தை வழங்கும் நோக்குடன் ரூபா 31,529,349 தேறிய இலாபமொன்றைக் காண்பித்து அந்த ஆண்டிற்காக புறம்பான வருமானக் கூற்றொன்றை தயாரித்திருந்தது. அதற்கமைய, 2014 நவம்பர் 21 ஆந் திகதிய 05/2014 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கைக்கு முரணாக ரூபா 3,380,459 தொகையை நிறுவகம் அதன் பதவியணியினருக்கு மிகையூதியமாகச் செலுத்தியிருந்தது.

**4.3 மனிதவள முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிறுவகத்தின் அனுமதிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணி முறையே 360 மற்றும் 266 ஆக இருந்தது. அவற்றில் 94 வெற்றிடங்களிலுள்ள 16 பதவிகள் உள்ளிட்ட 25 வெற்றிடங்கள் உள்ளக கணக்காய்வாளர், நிதிப் பணிப்பாளர் மற்றும் செயற்பாட்டு பிரதி பணிப்பாளர் போன்ற நிறைவேற்று மட்டத்தில் பொருத்தமான நபர்கள் மூலம் அந்த பதவிகளை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்காமல் பல ஆண்டுகளாக 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறும் பதிற் கடமை அடிப்படையில் காணப்படுகின்றன.

**5 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**5.1 வருடாந்த அமுலாக்கல் திட்டம்**

நிர்மாண உபகரண பயிற்சி நிலையத்தின் (CETRAC) வருடாந் அமுலாக்கல் திட்டத்தின் படி, நிர்மாண தொழிலிற்கான ஆலோசனைச் சேவைகள், மதியுரைச் சேவைகள் மற்றும் பராமரித்தல் நிர்வாக சேவைகளை வழங்குதலே ஆலோசனைப் பிரிவின் பிரதான செயற்பாடுகளாகும். இருப்பினும், இச் சேவைகளிலிருந்து 2014 ஆம் ஆண்டில் CETRAC இனால் உழைக்கப்பட்ட வருமானம் ரூபா 354,870 மாத்திரமாகும்.

**5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு**

மீளாய்வாண்டிற்காக பாதிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம் மற்றும் செலவினங்களிற்கு இடையில் பாரிய முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடானது வினைத்திறனான முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

**6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது நிர்மாண பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகத்தின் தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) செலுத்த வேண்டிய மற்றும் பெற வேண்டிய கணக்குகள்
(இ) கணக்கீட்டு ஏடுகளின் பேணுகை
(ஈ) பொருட் பட்டியல் வழங்கல்
(உ) நிலையான சொத்துக்கள் மீதான கட்டுப்பாடு
(ஊ) மனித வள முகாமைத்துவம்